**அரச கரும மொழிகள் ஆணைக்குழு - 2018**

**----------------------------------------------------------------------------**

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-----------------------------------------------------

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.2 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழு தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- ஆணைக்குழுவின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- ஆணைக்குழுவின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்ததா என்பதும்,

- ஆணைக்குழு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- ஆணைக்குழுவின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

### 1.4.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.4.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,000,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று 2015 ஆம் வருடம் அமைச்சினால் கையேற்கப்பட்டிருந்தபோதும் கணக்குகளில் காட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மதீப்பீட்டுஅறிக்கை கருத்திற் கொள்ளப்படாமையால் இப் பெறுமதியை ஏடுகளில் காட்டுவதற்கும் இறுதிக் கணக்குகளைத் திருத்தம் செய்வதற்கும் குறிப்பிட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும்போது வருமானம், செலவு, சொத்துக்கள், பொறுப்புக்கள், போன்ற சகல அம்சங்களும் மிகச் சரியாக இனங்காணப்பட்டு கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | - | |

| | | | |
|---|---|---|---|
| (1) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | உப கட்டு நிதியானது குறிப்பிட்ட தேவை பூர்த்தியாக்கப்பட்ட பின் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டின் போது 5 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 191,750 ஆன உப கட்டு நிதியானது 15 நாட்கள் தொடக்கம் 2 மாதங்கள் வரையான காலதாமதத்தில் தீர்க்கப்பட்டது. மேலும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா. 197,700 தொகையான முற்பணமானது 53 தொடக்கம் 100 வீதம் வீச்சிலான சேமிப்புடன் மீள் நிரப்பப்படட்டது. | செலவைப் பூர்த்தி செய்வதற்கான பொருத்தமான மதிப்பீட்டைத் தயாரிக்கும்படி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் என்பவற்றுக்கு இணங்க முற்பணக் கொடுப்பனவுகள் காலதாமதமின்றி தீர்க்கப்படல் வேண்டும். முற்பணங்கள் சரியான மதிப்பீடுகளுக்கமைய செலுத்தப்பட வேண்டும். |
| (11) நிதிப்பிரமாணம் 396 | 2018 திசெம்பர் 31 வரையான வழங்கப்பட்ட 6 மாதங்கள் கடந்தும் உள்ள ரூபா 46,949 பெறுமதியான 16 காசோலைகள் சம்பந்தமாக 2019 மார்ச் 31 வரையில் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தற்போது மீள் நினைவூட்டல்கள் அனுப்பப்பட்டுள்ள போதிலும் திகதிகளை நீடிப்பதற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகளை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டுள்ளது. | வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கும் போது வழங்கப்பட்ட காசோலைகளைக் கருத்திற்கொண்டு நிதிப்பிரமாணங்களுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பிரிவு | 2018 ஆம் வருடத்திற்கான பொருட்கணிப்பு அறிக்கை 2019 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு உரிய பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 மே 31 ஆம் திகதி வரையில் பொருட்கணிப்பு அறிக்கை சமர்பிக்கப்படவில்லை. | தற்போது பொருட்கணிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் விரைவாக பொருட்கணிப்பு அறிக்கையைச் சமர்ப் பிக்கும்படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதிக்குள் பொருட்கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அறிக்கைகள் சமர்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா. 376,464 தொகையான பற்றாக்குறை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 6,550,394 தொகையாக இருந்தது. இதனால் நிதி விளைவுகளில் ரூபா 6,173,930 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. சம்பளங்கள், கூலிகளும் ஊழியர் கொடைகளும் மற்றும் திருத்தங்களும் பராமரிப்புச் செலவுகளும் பயன்பாடுகளும் ஏனைய செலவுகளும் என்பவற்றில் ஏற்பட்ட குறைவுகள் முறையே ரூபா 2,269,637 , ரூபா 5,649,749 , ரூபா 2,452,894 என்பன இம்முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2012 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அச்சிட்டிருந்த ரூபா. 397,350 பெறுமதியான 4415 அருஞ்சொல் அகராதிகள் மற்றும் குறுகிய கற்கை நெறிப் புத்தகங்கள் என்பன 2019 யூன் 10 ஆம் திகதி வரையில் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த இருப்பானது 2017 ஆம் ஆண்டிற்குரிய கணிப்பீட்டிற்கு உட்படுத்தப் படாததுடன் மீளாய்வாண்டிற்கான பொருட்கணிப்பீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை மொழிகள் வட்டத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இப்புத்தகங்களின் விநியோகம் நடைப்பெற்றுக்கொண்டிருக்கின்றது. 2019 ஆம் வருடத்திற்கான பொருட்கணிப்பீட்டில் இப்புத்தக இருப்புக்களை உள்ளடக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இப்புத்தகங்கள் பழைய பதிப்புக்களாகையால் விரைவாக விநியோகிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் மீதிப்புத்தகங்கள் ஒவ்வொரு வருட இறுதியின்போதும் பொருட்கணிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெற்றிடங்களின் எண்ணிக்கை 21 ஆக இருந்ததுடன் 2016 முதல் நிலவிய 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | இப்பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்புத்திட்ட நடைமுறையானது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காகச் சமர்பிக்கப்பட்டிருப்பதுடன் திட்டமானது அனுமதிக்கப்பட்ட உடன் ஆட்சேர்ப்பு செய்யப்பட முடியும். | எதிர்காலங்களில் பதவிகளுக்கான வெற்றிடங்கள் தோன்றாத வகையில் ஆட்சேர்ப்பானது இயன்றளவிற்கு விரைவாகச் செய்யப்படல் வேண்டும். |